# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 06 திங்கட்கிழமை 19.07.2024 கதிர் 308











## ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர்

# தமிழ்த் தேசியப் பேரவையினது புரிந்துணர்வு உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் கைச்சாத்து!

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நோக்கில் தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

2➤



## அமைச்சர் ஜீவனைக் கைது செய்யுமாறு நுவரெலியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானைக் கைது செய்து நீதிமன்றத்தால் ஆஜர்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

களனிவெளி பெருந்தோட்டத்துக் குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற ்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகாத அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2➤



## மன்னாரில் மக்கள் போராட்டம்

மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை மற்றும் அந்தோனியார் புரம் கிராமங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள்தமக்கான காணி உரிமை கோரி இன்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பகுதியில் உள்ள சோழ மண்டலம் குளத்தின்

2➤

## பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்படும் என கூறப்படுவது பொய் பிரச்சாரமாகும்!

### ஐ.ம.சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க



பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்படும் என பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக தெரிவித்து வருவது மக்களை தவறாக வழி நடத்தும் செயல் எனவும், அரசியலமைப்பு ரீதியாக குறித்த தினங்களில் கட்டாயமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே

2➤

## சமூக ஊடகங்களோ அரசியல்வாதிகளின் பேச்சுக்களோ மக்களின் உண்மைக் கருத்தாக அமையப் போவதில்லை!

### ரணில் மட்டுமே புதிய உலகை காட்டக் கூடியவர் என்கிறார் அகிலவிராஜ்



கூட்டங்களின் போது திரளும் மக்களின் எண்ணிக்கையை கொண்டு தேர்தல் வெற்றிகளை கணிக்க முடியாது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் வலய பிரதிநிதிகள் விழிப்புணர்வு நிகழ்வில் உரையாற்றிய கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “சில அரசியல் கட்சிகளின்

2➤

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தல் குறித்த திகதிகளில் நடத்தப்படாவிட்டால் அது அரசியலமைப்பை மீறும் செயலாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, "ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்குரிய அதிகாரம் தற்போது தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த தருணத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு பதிலாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுமாயின் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதிகளில் மாற்றம் நிகழும், அவ்வாறாயின் அது அரசியலமைப்பை மீறுவதாகவே அமையும். அரசியலமைப்பை மீறுவதற்கு எவராலும் முடியாது. அதனால் தான் பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்படும் என கூறப்படுவது பொய்ப் பிரச்சாரம் என கூறுகின்றோம். அரசாங்கம் அன்று தொடக்கம் இன்று வரை அந்த பொய்யையே பரப்பி வருகின்றது. இவ்வாறன பொய்களை கூறி மக்களைக் குழப்ப நினைக்கிறார்கள். எனவே, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதியாகும். எந்தவொரு தேர்தல் வந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தியே வெற்றி பெறும்" - என்று குறிப்பிட்டார். (ரெஜ-52)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களனிவெளி பெருந்தோட்டத்துக்குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி அத்துமீறி நுழைந்தார் எனக் கூறி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட அவரது சகாக்களுக்கு எதிராக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தால் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையிட்டு இன்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நீதிபதி ஜயமினி அம்பகஹவத்தவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பாக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, சட்டத்தரணி பாலித சுபசிங்க மற்றும் சட்டத்தரணி சுரேஷ் கயான் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த வழக்கின் பிரதான சந்தேகநபரான நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் அவர் சார்ந்த ஏனையவர்களுக்கு இன்று வழக்கு தொடர்பான விசாரணைக்கு வருகை தரும்படி நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இன்று குறித்த வழக்குக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் வருகை தரவில்லை என்பதால் இது தொடர்பான மேலதிக தகவல்களை நுவரெலியா பொலிஸாரால் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்ததையடுத்து தகவல்களைப் பரிசீலனை செய்த நீதிபதி ஜயமினி அம்பகஹவத்த வழக்கின் பிரதான சந்தேகநபரான அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாக்கும்படி உத்தரவிட்டார். (05)

## தமிழ்தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய கொள்கை சார்ந்து இயங்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும், சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, பொ.ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளும், தமிழ்ப் பொது அமைப்புகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

தமிழ்த் தேசிய பேரவை உருவாக்குவது தொடர்பான இணக்கம் முன்னரே எட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 6ஆம் திகதி மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கைத்தமிழரசுக்கட்சியின்பெருந்தலைவர் இரா. சம்பந்தன் காலமானதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவது பிற்போடப்பட்டது. (05)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரச அனுமதியுடன் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த அந்தோனியார்புரத்தைச் சேர்ந்த மக்களுக்கு நபருக்கு தலா 2 ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும், அதன் ஊடக வாழ்வார செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் எந்தவொரு காணி ஆவணங்கள் இன்றி பல வருடங்களாக அப்பகுதியில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இவ்வாறான நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு குறித்த காணிகளை அந்தோனியார்புரம் மக்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் உள்ளடங்கலாக மன்னார் மாவட்டத்தைச் சேராத வவுனியா மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த செல்வந்தர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த நபர்களால் காணிகளைப் பண்படுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் தங்களுக்குச் சொந்தமான காணியைத் தாங்கள் பூர்வீகமாகப் பயன்படுத்திய காணியைத் தங்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்த நபர்களிடமும், பணம் படைத்தவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினர் அவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் குறித்த போராட்டம் இன்று காலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், இந்த நாட்டில் ஏழைகளுக்கு நீதியே இல்லையா ?, அரச அதிகாரிகளே காணி மாபியாக்களின் கூட்டாளிகளா? அரச அதிகாரிகளே துரோகத்துக்குத் துணை போகாதீர்கள், தமிழ் அரசியல்வாதிகளே ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றீர்களா? போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனிடம் போராட்டகாரர்கள் கையளித்த நிலையில், இவ்வாறு காணி தொடர்பான பிணக்குகளை நீண்ட நாட்கள் முடிவுத்தாமல் வைத்திருக்க முடியாது எனவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்குக் காணி இல்லாத நிலையில் வேறு மாவட்டத்தையும்வெளிநாட்டையும்சேர்ந்தவர்களுக்குக் காணி வழங்குவதை ஏற்க முடியாது எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு குறித்த காணி விடயம் தொடர்பாக மாவட்ட செயலகம் சார்பாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கவுள்ளதாகவும், இன்றைய போராட்டம் தொடர்பான ஆவணங்களையும் அறிக்கையுடன் சமர்ப்பித்து விரைவில் குறித்த பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான ஒரு முடிவைப் பெற்றுத்தருவதாகவும் அரச அதிபர் உறுதியளித்தார்.

## சமூக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

*கூட்டங்களுக்கு குளியாப்பிட்டியவிலிருந்து தினமும் பஸ்ஸொன்று செல்வதைப் பார்த்துள்ளேன். அதனால், கூட்டத்தைப் பார்த்து வெற்றியை கூற முடியாது. சமூக ஊடகங்களோ, அரசியல்வாதிகளின் பேச்சுக்களோ மக்கள் கருத்தாக அமையாது. ஆட்களை வேலைக்கு அமர்த்தி அவர்களூடாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் போலியான பிரச்சாரங்களே அவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இன்றைய வேட்பாளர்களில், தற்போதைய ஜனாதிபதி மட்டுமே உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பேசுகிறார். அவர் தனது அரசியல் அனுபவத்துடனும், தனது வளர்ச்சித் திட்டங்களிலிருந்து கற்ற அறிவுடனும், இளைஞர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொண்டுள்ளார். அவரது பணியாற்றும் திறன் துடிப்புடன் இளமையாகவே உள்ளது. தலைமுறை மாற்றம் - வேறுபாடு எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை அவர் நன்றாகவே கண்டுள்ளார். அவர் தனது உண்மையான தலைமைத்துவத்தை ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் கொண்டு இந்த நாட்டுக்கு காட்டியுள்ளார். நாட்டுக்கு தேவையான முடிவுகளை சரியான நேரத்தில், சரியான முறையில் அவர் எடுத்துள்ளார்.*

*நமது நாட்டில் நிலவுகின்ற ஊழலைப் பற்றி,கொமிஷன் வாங்குதல் பற்றி பலரும் பேசுகின்றார்கள், ஆனால் ஜனாதிபதி தான் இலங்கையில் ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவெற்றியுள்ளார். எதிர்காலத்தில் நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய உலகம் முற்றிலும் வேறுபட்டது. இந்த அறிவு என்பது அடிக்கடி புதுப்பிக்கப்படுவதுண்டு. தற்போதுள்ள பாரம்பரிய தொழில்களில் அறுபது சதவீதமானவை மாற்றம் கண்டு புதிய உலகத்திற்கேற்ப புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு புதிய உலகத்தை நீங்கள் கனவு கண்டால், அதை நிறைவேற்றும் திறன் இந்த ஜான்பாதிபதியிடமே உள்ளது என்பதை நாம் மக்களுக்கு விளக்க வேண்டும் - என்றார்.*

*(ரெஜ-53)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆடி மகோற்சவ தீர்த்தோற்சவம்





(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவ தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இம் மகோற்சவம் தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்த மண்டபப் பூசையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் இடம்பெற்று வந்தது. இன்று முருகப் பெருமான் காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தம் இடம் பெற்றது.

# முக்கோண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் புதுவெளி விளையாட்டுக்கழகம் சம்பியனானது





(அஸ்ஹர் இப்றாஹிம்)

முசலி சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் ஊடாக நடத்தப் படும் கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு வீரர்களை தயார்ப்படுத் தும் ஐந்தாவது முக்கோண மென்பந்து கிரிக்கட் சுற்றுத்தொடர் கூழாங் குளம் அல் ஹிக்மா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இச்சுற்றுப் போட்டியை ஐக்கிய தேசிய கட்சியின் சிலாவத்துறை அமைப்பாளர் ஜே.ரிஸ்வியின் ஒருங்கிணைப்பில், இளைஞர் சேவை அதிகாரி தன்ஸீமின் மேற்பார்வையில் ஒழுங்கமைத்திருந்தனர். கூழாங்குளம் அல் ஹிக்மா அணியினருக்கும் புதுவெளி விளையாட்டு கழகத்தினருக்கும் நடைபெற்ற இறுதிப்போட்டியில் புதுவெளி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று கிண்ணத்தினையும் பரிசுத்தொகையையும் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபரும் முசலி கூட்டுறவு சங்கத்தின் உப தலைவருமான சலாகுதீன் கலந்து சிறப்பித்திருந்தார்.




## முன்னாள் அமைச்சர் மர்/ஹும் ஏ.ஆர். மன்சூர் நினைவுப் பேருரையும் பரிசளிப்பு வைபவமும

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் நினைவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தினால் நடத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் "கறை படியாச் சேவைகள்" எனும் தலைப்பில் இடம்பெற்ற நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை (25) நடைபெறவுள்ளது.

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் அனுசரணையில், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொள்வார். முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.அப்துல் கபூர் ஆற்றுவார்.

இதன்போது கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. முன்னாள் அமைச்சர் மர்/ஹும் ஏ.ஆர். மன்சூரின் அவரது மறுமை ஈடேற்றத்திற்காக துஆப் பிரார்த்தனை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டி விலகினார் அதிபர் ஜோ பைடன்!

## கமலா ஹாரிஸுக்கு ஆதரவைத் தெரிவித்தார்



அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து தற்போதைய அதிபரும் ஜனநாயக கட்சி வேட்பாளருமான ஜோ பைடன் (81) விலகியுள்ளார். தனக்குப் பதிலாக அதிபர் வேட்பாளர் ஆவதற்கு துணை அதிபர் கமலா ஹாரிஸுக்கு பைடன் ஆதரவு தெரிவித்துள்ளர்.

நவம்பர் 5 ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் அதிபர் ஜோ பைடன் களத்தில் இருந்தார். குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். இந்நிலையில், வயது முதிர்வு காரணமாக பைடனின் செயல்திறனில் சுணக்கம் ஏற்பட்டது. கடந்த மாதம் ட்ரம்ப் உடனான நேரடி விவாதத்தில் பைடன் மிகவும் தடுமாறியது விமர்சனங்களுக்கு வழிவகுத்தது. இதன் காரணமாக அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து பைடன் விலக வேண்டும் என்று அவரின் சொந்தக் கட்சியினரே மிகுந்த அழுத்தம் அளித்து வந்தனர்.

அதிபர் தேர்தலில் போட்டியிட அவருக்கு எதிர்ப்பு வலுத்த சூழலில், அவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ள நிலையில், தனது இல்லத்தில் பைடன் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில், அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக பைடன் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். இதுதொடர்பாக அவர் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட கடிதத்தில், தற்போது உலகில் வலுவான பொருளாதார நாடாக அமெரிக்கா விளங்குகிறது. கடந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில் (பைடன் அதிபராக பதவி வகித்த காலம்), ஒரு தேசமாக அமெரிக்கா மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் மறுகட்டமைப்புக்கு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

எண்ணற்ற அமெரிக்கர்களுக்கு மலிவான கட்டணத்தில் மருத்துவ சிகிச்சை வழங்குவது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாக முதல் ஆபிரிக்க - அமெரிக்க வம்சாவளிப் பெண் நியமிக்கப்பட்டார்.

தற்போது உலகை வழிநடத்துவதில் அமெரிக்கா சிறந்த நிலையில் உள்ளது. இதுபோன்ற நிலையில், முன்னெப்போதும் அமெரிக்கா இருந்ததில்லை. இவை அனைத்தும் அமெரிக்கர்களின் ஆதரவின்றி சாத்தியமாகி இருக்காது. நூற்றாண்டுக்கு ஒருமுறை ஏற்படும் கொள்ளை நோய்த்தொற்று, மோசமான பொருளாதார நெருக்கடியை அமெரிக்கர்கள் ஒன்றாகக் கடந்து வந்துள்ளனர். அமெரிக்க ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், உலகெங்கும் அமெரிக்காவின் கூட்டுறவுக்கு புத்துயிர்அளிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அதிபராக அமெரிக்கர்களுக்கு சேவையாற்றுவதே எனது வாழ்வில் எனக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவம். அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட வேண்டும் என்பதே எனது நோக்கம். ஆனால், ஜனநாயகக் கட்சி மற்றும் நாட்டின் நலன் கருதி அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகுகிறேன். அதிபராக எஞ்சிய பதவிக் காலத்தில் எனது கடமைகள் மீது மட்டுமே கவனம் செலுத்த உள்ளேன். எனது முடிவு தொடர்பாக நாட்டு மக்கள் இடையே விரைவில் விரிவாக உரையாற்றுவேன், என்று தெரிவித்துள்ளார்.

பைடன் வெளியிட்ட மற்றொரு பதிவில், ‘கடந்த 2020 ஆம் ஆண்டு நான் அதிபர் தேர்தலில் போட்டியிட்டபோது கமலா ஹாரிஸை துணை அதிபராக தேர்வு செய்ய வேண்டும் என்பதே எனது முதல் முடிவாக இருந்தது. இந்நிலையில், தற்போதைய அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ் களம் காண வேண்டும் என்பதற்கு எனது முழு ஆதரவு மற்றும் ஒப்புதலை வழங்குகிறேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் தேர்தல் போட்டியிலிருந்து ஜோ பைடன் விலகியுள்ள நிலையில், அக் கட்சியின் அடுத்த அதிபர் வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்த ஜோ பைடன், அடுத்த அதிபர் வேட்பாளராக துணை அதிபர் கமலா ஹாரிஸின் பெயரை முன்மொழிந்துள்ளார். கட்சியின் தற்போதைய விதிப்படி, அதிபர் வேட்பாளராக வெறொரு நபரை பைடன் கைகாட்ட முடியாது என்றபோதும், அரசியல் ரீதியில் அவருடைய முன்மொழிவு அழுத்தம் கொடுப்பதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, பைடனுக்கு பதிலாக புதிய வேட்பாளரைத் தேர்வு செய்வதற்காக வரும் ஓகஸ்ட் 19 முதல் 22 ஆம் திகதி வரை சிகாகோவில் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டத் திட்டமிட்டுள்ளனர். இதில் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி வேட்பாளர் முன்னாள் அதிபர் ட்ரம்ப்புக்குத் தேர்தலில் வலுவான சவாலை அளிக்கும் வகையில், மக்கள் செல்வாக்குள்ள வேட்பாளரை கட்சியின் சுமார் 4,700 நிர்வாகிகள் இணைந்து தேர்வு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதும், அதிபர் பைடனின் முன்மொழிவை புறந்தள்ளி, புதிய வேட்பாளரை கட்சி நிர்வாகிகள் தெரிவு செய்வது அவ்வளவு எளிதல்ல என்ற கருத்தும் நிலவுகிறது. ஏனெனில், அதிபர் தேர்தலில் வேட்பாளராக தேர்வு செய்யப்படுவதற்கு ஒவ்வொரு மாகாணம் வாரியாக கட்சிக்குள் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், பெரும்பாலானவற்றில் பைடனுக்கு ஆதரவு கிடைத்தது. சுமார் 3,896 கட்சி நிர்வாகிகள் பைடனுக்கு ஆதரவு தெரிவித்தனர். அமெரிக்க சமோவா மாகாணத்தில் மட்டுமே அவருக்கு எதிராக வாக்களிக்கப்பட்டது. அதிபர் வேட்பாளராவதற்கு கமலா ஹாரிஸ் பெயருடன், கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசம், மிச்சிகன் ஆளுநர்கிரெட்சன் விட்மெர் ஆகியோரின் பெயர்களும் பரிசீலனையில் உள்ளன. அதிபர் தேர்தலில் இருந்து பைடன் விலகியது தொடர்பாக சமூக ஊடகத்தில் முன்னாள் அதிபரும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், ‘நேர்மையில்லாத பைடன் அதிபர் தேர்தலில் போட்டியிடத் தகுதியில்லாதவர்’ என்று விமர்சித்துள்ளார். (04)




## நேபாளத்தின் புதிய பிரதமர் கே.பி.சர்மா ஒலி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றார்

நேபாளத்தின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள நேபாள கம்யூனிஸ்ட் கட்சி - ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (சிபிஎன்-யுஎம்எல்) கட்சித் தலைவர் கே.பி.சர்மா ஒலி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.

275 இடங்களைக் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில், கூட்டணிக் கட்சியான நேபாளி காங்கிரஸ் கட்சியுடன் சேர்து சர்மா ஒலிக்கு 178 எம்.பி.க்களின் ஆதரவு உள்ளது. இதுதவிர, ராஷ்ட்ரீய பிரஜா கட்சி போன்ற சிறிய கட்சிகளும் சர்மா ஒலியை நாடாளுமன்றத்தில் ஆதரிக்கப்போவதாக அறிவித்தன.

இதையடுத்து, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சர்மா ஒலி தலைமையிலான அரசு மீது ஞாயிற்றுக்கிழமை நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் சர்மா ஒலிக்கு ஆதரவாக 188 எம்.பி.க்கள் வாக்களித்த நிலையில், அவர் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார். நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெறத் தேவையான வாக்குகளைவிட கூடுதலாக 50 வாக்குகளை அவர் பெற்றார்.

முன்னதாக, கருத்து வேறுபாடு காரணமாக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி - மாவோயிஸ்ட் மையம் (சிபிஎன்-எம்சி) தலைவரான பிரசண்டா தலைமையிலான அரசுக்கு அளித்து வந்த ஆதரவை சர்மா ஒலி அண்மையில் திரும்பப் பெற்றார். இதையடுத்து, பிரசண்டா அரசு கவிழ்ந்த நிலையில், நேபாளி காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து சர்மா ஒலி புதிய அரசை அமைத்தார்.

கடந்த ஜுலை 15 ஆம் திகதி நேபாள பிரதமராக அவர் பதவியேற்றார். அந்நாட்டு பிரதமராக அவர் பதவியேற்றது இது நான்காவது முறையாகும்.

நேபாள அரசியல் சாசனத்தின்படி, ஒருவர் பிரதமராகப் பதவியேற்ற 30 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(04)

# கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் புதுவருட நிகழ்வும் கௌரவிப்பும்

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய புதுவருட நிகழ்வும், கௌரவிப்பு விழாவும் நேற்று கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் அஷ்ஷேய்க் ஏ.எல்.எம்.அஷ்ரஃப் சர்க்கி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் கபூரி உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது இஸ்லாமிய புதுவருடத்தினையொட்டி பல்வேறு சொற்பொழிவுகள் இடம்பெற்றதுடன், கலாசார நிகழ்வுகள் பலவும் மேடையேற்றப்பட்டன. துறைசார் பேச்சாளர்கள் மூலம் இஸ்லாமிய புதுவருடத்தின் சிறப்புகள் பற்றியும், இஸ்லாமிய புதுவருடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் விசேட சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இதேவேளை, கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின்போது இக்கல்லூரியில் இருந்து பகுதி நேரமாக கற்று நூறு சதவீத சித்திகளைப் பெற்ற மாணவர்களும், அம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் இதன்போது



பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரியின் முதல்வர் அஷ்ஷேய்க் ஏ.எல். எம்.அஷ்ரஃப் சர்க்கி மற்றும் நிகழ்வின் அதிதி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் கபூரி ஆகியோரின் சேவையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், தேசிய தொழிற்றகைமை பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த ஒரு தொகுதி கல்லூரி மாணவர்களுக்கும் இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# காயத்திரி கிராமத்தில் 25 வீடுகளை நிருமாணிக்க அடிக்கல் நாட்டு விழா



( வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள காயத்திரி கிராம மக்களுக்கான 25 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

இவ்வீடுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் வேண்டுகோளுக்கு அமைவாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 1989-1990 காலப்பகுதியில் கல்வி கற்று தற்போது கனடாவில் வசித்துவரும் நிதி வழங்குனர்கள் இணைந்து சீடர்ஸ் கனடா அமைப்பினர் திருக்கோவில் - 4 காயத்திரி கிராமத்தில் உள்ள வீடற்ற 25 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட தீர்மானிக்கபட்டிருந்தது.

இதில் தற்போது 10 வீடுகள் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில்அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் சீடர்ஸ் கனடா அமைப்பின் தலைவர் இளங்குமரன் வீ கான் மற்றும் மன்னார் மாவட்ட மாற்று திறனாளிகள் அமைப்பின் இணைத்தலைவர் பி.றோபட் திருக்கோவில் பிரதேச உதவி செயலாளர் திருமதி.எஸ்.நிருபா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷ ாந்த், கிராம நிருவாக உத்தியோத்தர் என்.கந்தசாமி, வீட்டுத்திட்ட இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இவ்வீடுகள் அமைப்பதற்காக பிரதேச செயலகத்தால் காணிகளும் இலவசமாக மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அடிக்கல் நாட்டப்பட்ட வீடுகளில் முதற்கட்டமாக 5 வீடுகள் 2023.07.09 அன்றும் இரண்டாம் கட்ட 5 வீடுகள் 2023.12.21 அன்றும் பூரணமாக கட்டிமுடிக்கப்பட்டு மிக வும் சிறப்பானமுறையில் மக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

அதனை தொடர்ந்து மூன்றாம் கட்டமாக கட்டமாக 3 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அவ்வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி கடந்தமாதம் (2024 .05.08) ஆரம்பித்தது வைக்கப்பட்டது. இவ்வாறு 2024.05.08 ஆரம்பித்தது வைக்கப்பட்ட வீடுகள் தற்போது முற்றுமுழுதாக முடிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. இம்மூன்று வீடுகளுக்கான நிதியினை சீடர்ஸ் கனடா அமைப்பினரின் ஏற்பாட்டிற்கமைவாக அன்பு நெறி அமைப்பினர் வழங்கியிருந்தனர்.

திருக்கோவில்-4 கிராம உத்தியோகத்தர் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் வீட்டுதிட்ட அமைப்பினர்களான திருமதி.லோ.லோஜிதா, ஆறுமுகம்.பொ.கேதீஸ்வரன், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராகிறார் மோர்னி மோர்க்கல்?

## இடைக்காலப் பயிற்சிளாராக சாய்ராஜ் பகதுலே நியமனம்

இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து ரி-20 மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாட உள்ள இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் சாய்ராஜ் பகதுலே நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் அணி இந்த வாரம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா மூன்று ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவிருக்கிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள கௌதம் கம்பீரின் பணி இந்தத் தொடரில் இருந்துதான் ஆரம்பமாகவுள்ளது.



முன்னதாக தலைமைப் பயிற்சியாளராக இருந்த ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் முடிவடைந்த சமயத்தில், அவருடன் இணைந்து பணியாற்றிய உதவிப் பயிற்சியாளர்களின் பதவிக்காலமும் முடிவடைந்தது. இந்த நிலையில், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வீரரான மோர்னி மோர்க்கலை பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என்று கம்பீர் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக வெளிநாட்டுப் பயிற்சியாளர்களை நியமித்திருக்காத இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இது குறித்து முடிவெடுக்க நேரம் தாழ்த்தியது. இந்த நிலையில் கம்பீரின் கோரிக்கைக்கு அமைய மோர்னி மோர்க்கல்லை பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

39 வயதான அவர் கடந்த 2018 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று, அதன்பிறகு பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராகக் கடந்த ஆண்டு வரை பணியாற்றி இருந்தார்.

கம்பீருடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் ஒன்றாக விளையாடியிருந்த மோர்னி மோர்க்கல், தனிப்பட்ட காரணங்களுக்காக இலங்கைச் சுற்றுப்பயணத்தில் இணைந்து கொள்ள மாட்டார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

மறுபுறத்தில் இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக மோர்னி மோர்க்கல் நியமிக்கப்பட்டுள்ளதாக எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலையில் இலங்கை தொடருக்கான இந்திய அணியின் இடைக்காலப் பந்துவீச்சுப் பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளரான சாய்ராஜ் பகதுலே நியமிக்கப்பட்டுள்ளார்.

51 வயதான இவர், இந்திய அணிக்காக 2 டெஸ்ட் மற்றும் 8 ஒருநாள் போட்டிகளில் (1997-2003) விளையாடி உள்ளார். பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியில் கடந்த 3 ஆண்டுகளாக பந்துவீச்சுப் பயிற்சியாளராக அவர் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கௌதம் கம்பீரின் ஆலோசனைக்கு அமைய, இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணத்தில் உதவிப் பயிற்சியாளர்களாக இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் அபிஷேக் நாயர் மற்றும் நெதர்லாந்தின் முன்னாள் வீரர் டென் டெஸ்காட் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ராகுல் டிராவிட்டுடன் பணியாற்றிய டி. திலீப் களத்தடுப்பு பயிற்சியாளராக செயல்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## பாடசாலை மாணவர்களுக்கு மனித - யானை மோதல் பற்றிய விழிப்புணர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பினால் மனித யானை மோதலை தவிர்த்து நாட்டில் பயமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வுச் செயலமர்வொன்று அநுராதபுரம்,ஹொரவப்பொத்தான, மந்தாகனி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்ற மேற்படி செயலமர்வில் மனித - யானை மோதல் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

யானையின் வாழிடம் மனிதர்களினால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதனாலும், சேனைப்பயிர்ச்செய்கை, நவீன நகரமாக்கல், தொழிற்சாலைகள் அமைத்தல், இயற்கை நீர்நிலைகள் அழிக்கப்படுதல் காரணமாக காட்டில் சுதந்திரமாக நடமாடிய யானைகள் உணவு மற்றும் நீர் தேடி மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மனித உடமைகளை சேதப்படுத்துவதாலும், பெறுமதியான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதாலுமே பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது. இந்த செயலமர்வு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது, இது போன்ற ஒரு திட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவதற்கான கதவுகளைத் திறந்தமை பாராட்டத்தக்க விடயமாகும். கிராமத்தில் உள்ள அடிமட்ட அமைப்புகளுடன் நேரடியாகப் பணியாற்றுவதை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்டு யானைகளின் மோதலை கட்டுப்படுத்த பல வழிகளை ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

முக்கியமாக மனித உயிர்களை காப்பாற்றுவதற்காக யானை வேலிகளில் கவனம் செலுத்துகிறோம். இது விவசாயிகளை வேலி மற்றும் அதன் பராமரிப்பில் பயிற்சி பெற ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.

இந்நிகழ்வில் யானை-மனித மோதல் முகாமைத்துவம் தொடர்பான பிரதான உரையை களனி பேரதெனிய பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சுதேஷ் ருவிந்த நிகழ்த்தினார். யானைகளுடன் மனிதர்கள்



எவ்வாறு பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பது இங்கு விளக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் ஆணையாளர், சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர், அதிபர்கள் ஆகியோரும் உரைகளை வழங்கினர். நிகழ்வின் இறுதியில் சுற்றால் அதிகார சபையினால் நடத்தப்பட்ட நிகழ்வில் பச்சைப் பதக்கம் பெற்ற மாணவர்களுக்கு சின்னமும் சூட்டப்பட்டது

# கண்ணீர் அஞ்சலி



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

**பரராஜசிங்கம் தனலட்சுமி**

தோற்றம் :-01.01.1936 மறைவு :-22.07.2024

அவர்கள் (22.07.2024) திங்கட்கிழமை
காலமாகிவிட்டார்.

நாளை (23/07/2024) காலை 10 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றும்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களும் ஆறுதல்களும்.

-பசுமை ஊடக இல்ல முகாமைத்துவத்தினரும் பணியாளர்களும்




# வடமேல் மாகாண ஆளுநரினால் கிழக்கு அபிவிருத்திக்கு 2 கோடி!



(எம்.எம்.ஜெஸ்மின்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திவேலைத்திட்டத்தினூடாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் முயற்சியினால்கோறளைப்பற்று மத்தி, வாழைச் சேனை பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் சமூக மட்ட அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், பள்ளிவாயல்கள், அரச நிறுவனங்களுக்கான நிதியொதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு வடமேல் மாகாண ஆளுநரின் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைத்நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பதிதியாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் இணைப்புச் செயலாளரும் ஏறாவூர்நகரசபையின்முன்னாள் தவிசாளருமான அல்ஹாஜ் தஸ்லீம், ஜனநாயக ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம்.தையூப் ஆசிரியர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

ஒரு கோடி 82 இலட்சம் கோறளைப்பற்றுமத்தி, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் 15 இலட்சமும், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 39 இலட்சமும் முதலாம் கட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல் வேறு கட்டங்களாகநிதியொதுக்கீடுகள் இடம்பெறவுள்ள தாக வட மேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2024இல் வெளியிடப்பெற்றது.